5 JUN 2000

பக்கங்கள் நான்கு

# வலம்புரி
VALAMPURI

விலை ரூபா 5-00

சங்கு: 1 வள்ளுவர் ஆண்டு 2031 வைகாசி 22 ஞாயிற்றுக்கிழமை ( 04 · 06 · 2000 ) VALAMPURI ஒலி: 167

## ★ யாழில் இருந்து இராணுவம் வெளியேறினால்
# ஈழம் மலர்வதை தடுக்க முடியாது
# நாடு பாரிய அழிவையும் சந்திக்கும்

## ஜெனரல் அனுருத்த ரத்வத்த பேட்டி

(கொழும்பு)

**யாழ்ப்பாணத்தில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் அங்கிருந்து வெளியேறினால் "ஈழம்" என்னும் தனிநாடு உருவாகிவிடும் எனவே எச்சந்தர்ப்பத்திலும் இராணுவத்தினர் யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியேறமாட்டார்கள்.**

**இராணுவத்தினர் யாழ்ப்பாணத்தில் இருந்து பின்வாங்கினால் நாடு பெரும் அழிவைச் சந்திக்க நேரிடும்'**

இவ்வாறு பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த கூறினார்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்துக்குஅவர்வழங்கிய பேட்டியில் மேலும் கூறியதாவது:

தற்போது யாழ்ப்பாணத்தில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியேறு வார்களானால் 'ஈழம்' என்னும் தனிநாடு நிச்சயம் உருவாகிவிடும். அதனை எவரும் தடுத்துவிடமுடியாது. எனவே எச் சந்தர்ப்பத்திலும் இராணுவத்தினர் வெளியேற அனு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை விவகாரத்தில் இந்திய இராணுவத் தலையீடு கிடையாது

### பிரதமர் வாஜ்பாய் மீண்டும் வலியுறுத்து

(புதுடில்லி)

இலங்கையின் இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கு இந்தியாதனது இராணுவத்தை அனுப்பாது என பிரதமர் அடல்பிஹாரி வாஜ்பாய் மீண்டும் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

மத்திய ஹிலாங் பகுதியில் நேற்று பொதுக்கூட்டம் ஒன்றில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது விடயம் தொடர்பாக

(4 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.குடாவில் எரிபொருளுக்கான தட்டுப்பாடு விரைவில் நீங்கும்!

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் தற்போது நிலவி வரும் எரிபொருள்களுக்கான தட்டுப்பாடு இன்னும் இரண்டொரு தினங்களில் நீங்கி விடுமென யாழ். செயலக மற்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபன வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ் மாவட்டத்தில் உள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## திருடர் கோஷ்டி பிடிபட்டது

[யாழ்ப்பாணம்]

குருநகரில் உள்ள யாழ்- செயலக புனர்வாழ்வுக் களஞ்சியத்தை உடைத்துத் திருடிய திருடர்கள் என்ற சந்தேகத்தின் பேரில்39 பேர் கைது செய்யப்பட்டு யாழ்- பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள

(4 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ் கல்விவலய கூட்டம் நாளை

யாழ். கல்விவலயத்துக்குட்பட்டசகல பாடசாலை அதிபர்களையும் நாளை திங்கட்கிழமை முற்பகல் 12 மணிக்கு கலந்துரையாடல் ஒன்றின் பொருட்டு வலயப் பணிமனையில் சமுகமளிக்குமாறு பணிப்பாளர் திருமதி செல்வராணி மகாலிங்கம் கேட்டுக் கொண்டுள்ளார்.(சி)

### கலந்துரையாடல்

சகலபலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர்கள், பொதுமுகாமையாளர்கள், கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை திங்கட்கிழமை காலை 10

(4ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டுறவுச்சங்கங்களில் போதியளவு மாவை களஞ்சியப்படுத்தவும்!

[யாழ்ப்பாணம்]

யாழ்- மாவட்டத்தில் உள்ள 24.பலநோக்குக்கூட்டுறவுச் சங்கங்களுக்கும் தமக்குத் தேவையான அளவு மாவினை பெற்று களஞ்சியப் படுத்துமாறு யாழ்-அரச அதிபர் க.சண்முகநாதன் கூட்டுறவுச்சங்கங்களை கேட்டுள்ளார்.

தற்போது மாவுடன் பருத்தித்துறை துறைமுகத்தில் தரித்து நிற்கும் கப்பலில் இருந்து மாஇறக்கும் பணிகள் இன்று ஆரம்பிக்கப்பட விருப்பதால் கோண்டாவிலில் உள்ள உணவுக்களஞ்சியத்தில் கூட்டுறவுச்சங்கங்கள் திட்டப்பணிப்பாளரைச் சந்தித்து மாவினைப் பெறுவதற்கான அனுமதிபத்திரங்களைப் பெற்றுக்கொள்ளுமாறுஅரச அதிபர் கேட்டுள்ளார்.

## அதிகாரப்பகிர்வு பாராளுமன்றில் தேர்தலுக்கு முன் சமர்ப்பிக்கப்படும்

(கொழும்பு)

தமிழ் அரசியற் கட்சிகளுடனும் ஐக்கிய தேசிய கட்சியுடனும் ஆராயப்பட்டுவரும் அதிகார பரவலாக்கல் தீர்வுத் திட்டத்தை பாராளுமன்றத் தேர்தலுக்கு முன்னர் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் போவதாக ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா தெரிவித்துள்ளார்.

அரசியலமைப்பு திருத்தம், தொடர்பாக ஐ.தே. கட்சியுடன் நேற்று முனதினம் இடம் பெற்ற பேச்சின் போதே ஜனாதிபதி இத

[4ஆம் பக்கம் பார்க்க]

## பிரதேச செயலர் 'வேண்டுகோள்

தென்மராட்சியிலிருந்து இடம்பெயர்ந்து பருத்தித்துறை, கரவெட்டியில் தங்கியிருக்கும் ஓய்வூதியம் பெறுவோர் மற்றும் மாதாந்த உதவிப்பணம் பெறுவோர் நாளை திங்கட்கிழமை காலை முதல் நண்பகல் வரை கரவெட்டியில் தமது அலுவலகத்தில் சந்திக்குமாறு தென்மராட்சி பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

கோப்பாய், சங்கானை, சண்டிலிப்பாய்க்கு இடம் பெயர்ந்தோர் அவ்வப்பகுதி பிரதேச செயலகங்களில் தமது பதிவுகளை மேற் கொள்ளுமாறு அவர் தெரிவித்துள்ளார். (க-சி)

## புலிகள் தரப்பில் உயிரிழந்தோர்

(யாழ்ப்பாணம்)

தொடரும் 'ஓயாத அலைகள் மூன்று' நடவடிக்கையின் போது தமது தரப்பில் உயிரிழந்தோர் பெயர்விபரங்களை விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர். அவர்களின் விபரம் வருமாறு:

★ தமிழரசன் (சடையாண்டி ஈசன்) வவுனியா

★ லோறன்ஸ் / இளந்தென்றல் (கோபால் - எட்வேட் லோறன்ஸ்) கிளிநொச்சி

★ பொன்நிலா (கணபதிப்பிள்ளை கலாநிதி)

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஊரடங்கு அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ், பிரதேச செயலர் பிரிவில் அமுல் படுத்தப் பட்டிருக்கும் ஊரடங்குச் சட்டம் இன்று காலை 7.00 மணியிலிருந்து பிற்பகல் 4.00 மணி வரை தளர்த்தப்பட்டிருக்கும்.

யாழ். பிரதேச செயலர் பிரிவு தவிர்ந்த யாழ் குடா நாட்டின் தீவுப்பகுதி உட்பட ஏனைய பகுதிகளில் இன்று அதிகாலை 5 மணிக்குஊரடங்கு தளர்த்தப்பட்டுமீண்டும் இன்று இரவு ஏழு மணிக்கு அமுல் படுத்தப்படும் என்று யாழ். பாதுகாப்பு நடவடிக்கைத்தலைமைச் செயலகம் அறிவித்துள்ளது. [க-வ]

## ஈழத் தமிழருக்கு ஆதரவான ஆர்ப்பாட்டப் பேரணி ஒத்திவைப்பு

[சென்னை]

இலங்கை தமிழர்களுக்கு ஆதரவாக நாளை 5ஆம் திகதி நடைபெறவிருந்த ஆர்ப்பாட்டப் பேரணி ஒத்திவைக்கப்படுவதாக மறுமலர்ச்சி திராவிட முன்னேற்ற கழக பொதுச்செயலர் வை. கோபாலசாமி தெரிவித்துள்ளார்.

தமிழக முதல்வர் மு.கருணாநிதி தனது பிறந்தநாள் வேண்டுகோளில் கேட்டுக் கொண்டதாலேயே தாம் மேற்கண்ட முடிவை எடுத்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(4ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

கேதீஸ்வரன் என்னும் பெயருடைய 0901010525 விசேட அடையாள அட்டையும் சாம்பசிவம்சிவகஜனி என்னும் பெயருடைய 737670295V. இலக்க தேசிய அடையாள அட்டையும், கொக்குவில் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் அருள் ஜோதி சோதிட நிலையம் 502 K. K. S. வீதி யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(688)

### தவறிவிட்டது

எனது விசேட அடையாள அட்டை இல. 091305327 பெயர்: வேலாயுதம் திருநாவுக்கரசு பண்டத்தரிப்பிற்கும் கந்தர்மடத்திற்கும் இடையில் தொலைந்து விட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து வே. திருநாவுக்கரசு 163, அரசடி வீதி, கந்தர் மடம் என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும்.

(680)

### பொய்யா மொழி ஜோதிடம்

சனி, செவ்வாய்க்கிழமைகளில் 140, பருத்தித்துறை வீதி, நல்லூர் வீரமாகாளி அம்மன் கோவிலடியிலும் ஏனையநாட்களில் மல்லாகம் பழம்பிள்ளையார் கோவில்மடத்திலும் சந்திக்கலாம்.

(683)

### இறைச்சிக் கோழி

Broiler Cullbirds Cockerels

இறைச்சிக்கோழிகள்சுத்தம் செய்து(பாதிக்கோழிஉட்பட) தினமும் பெற்றுக் கொள்ளலாம் 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) முத்திரைச் சந்தையடி நல்லூர்

(546)

### இறைச்சிக் கோழி

கல்பேட்ஸ் விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்தல் இலவசம். தொடர்பு -31, மான்ஸ், பாடசாலை வீதி, உடுவில் சுன்னாகம். (கண்ணா வீடியோ சென்ரர் வளவு)

(671)

### த. ஆ. சங்க கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் மெமோரியல் கல்லூரியில் உடுவில் சண்டிலிப்பாய், தெல்லிப்பளை வட்டுக்கோட்டை தமிழாசிரியர் சங்க நிர்வாகிகளுக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறுமென சிரேஷ்ட பொதுச் செயலாளர் த. பஞ்சலிங்கம் கேட்டுக் கொண்டுள்ளார்.

(சி)

### ஆதாரம் காட்டிப் பெறவும்

சற்குணநாதன் குகதாஸ் பிறந்த திகதி 12-11-78, கச்சாய்ப்பிரிவுஎன்பவருடைய பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் வலம்புரி பணிமனையில் உள்ளது உரியவர் அத்தாட்சி காட்டிப் பெறவும்.

### லஷ்சுமி

(இணுவில்)

விஜய் ஜோதிகா நடித்த

**குஷி**

10.30 - 2.30 [பு.நே]

(423)

## அவசர கலந்துரையாடல்

யாழ்.பல்கலைக்கழகமுகாமைத்துவ கற்கைகள் வணிகபீட இறுதி வருட B பிரிவு மாணவர்களுக்கான அவசர கலந்துரையாடல் 06-06-2000 செவ்வாய் மு.ப 10.00 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் இடம்பெற இருப்பதால் அனைத்து மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

பிரதிநிதி
இறுதிவருட *B* பிரிவு
யாழ். பல்கலைக்கழம்.

(கி-420)

## அறியத்தரவும்

சாவகச்சேரியை வசிப்பிடமாகக் கொண்ட யாழ் மாநகர சபை நிர்வாக உத்தியோகத்தார் திரு சரவணபவனின் தற்போதையவசிப்பிட விபரத்தை அறிந்தவர்கள் தெரியத் தருமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

ஆணையாளர்

(கி-421)

## கலந்துரையாடல்

யாழ்.உயர் தொழில் நுட்ப நிறுவக அனைத்து மாணவர்களுக்கும், விரிவுரைகள், பரீட்சைகள் தொடர்பான கலந்துரையாடல் திங்கட் கிழமை(95-06-2000) காலை 10.00 மணிக்கு நிறுவக கேட்போர் கூடத்தில் நடைபெற உள்ளது அனைத்து மாணவரையும் தவறாது சமுகம் தருமாறு மாணவர் ஒன்றியம் கேட்டுக் கொள்கின்றது.

நன்றி

[677]

## பெற்றோர் உடன் சந்திப்பு

யா/கன்னியர் மடம் மகாவித்தியாலய மாணவிகள் கல்வி தொடர்தல் தொடர்பாக 05-06-2000 திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு பெற்றோர்களுடனான சந்திப்பு இடம்பெறும். ஆசிரியர்கள், பெற்றோர்களைத் தவறாது சமுகமளிக்குமாறு அதிபர் வேண்டுகின்றார்.

அருட்சகோதரி எம்.வில்பிரட்
அதிபர்.

[679]

## தேடுகின்றோம்

சாவகச்சேரி ஈசன் களஞ்சியம் சூரிபவான் உரிமையாளர் நளாயினி மிக்சர்ஸ்தாபன ஊழியர் முதலியோர் இருக்கும் இடம் தெரிந்தவர்கள் கீழ்க்காணும் விலாசத்திற்கு அறியத்தரவும்.

நளாயினி மிக்சர்
N. அழகர்சாமி

66, சிவன் பண்ணை வீதி,
கொட்டடி
யாழ்ப்பாணம்,

(682)

## STP COMPUTER WORLD

*No:54A, Palaly Road. Kantharmadam, Jaffna*

*Tp.2674 Email: Stpcom Sltnet. l.k.*

பாதுகாப்பற்ற சூழ்நிலை காரணமாக 10-05-2000 முதல் தடைப்பட்டிருந்த சகல வகுப்புக்களையும் மீண்டும் ஆரம்பிப்பது சம்பந்தமான கலந்துரையாடலொன்று நாளை திங்கட்கிழமை (05 - 06 - 2000) முற்பகல் 11.00மணிக்கு எமது தலைமை நிறுவனத்தில் நடைபெற இருப்பதால் எமது நிறுவனத்தில் கல்வி பயிலும் சகல மாணவர்களையும் இதில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

குறிப்பு:

★ NCCA பரீட்சைகளுக்கு பதிவு செய்த மாணவர்களுக்கான பயிற்சி நெறிகளும் உடன் ஆரம்பிக்கப்படவுள்ளதால், ஏற்கனவே பதிவு செய்த, பதிவு செய்யவுள்ள மாணவர்களையும் இக்கலந்துரையாடலில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

★ மானிப்பாயில் எமது கிளை நிறுவனமொன்றிலும் பயிற்சிகள் வழங்க ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது

நிர்வாகத்தினர்

244 யாழ் வீதி, மானிப்பாய்.
(மானிப்பாய் மகளிர் கல்லூரி முன்பாக) (673)

## யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்
## இலங்கை கலைப்பீடம்
## அனைத்துக் கலைப்பீடமாணவருக்குமான
# அறிவித்தல்

01. கலைப்பீட முதலாம், இரண்டாம், மூன்றாம், நான்காம் (ஏ, பி பிரிவுகள்) வருட மாணவர்களுக்கும், இராமநாதன் நுண்கலைக்கழக அனைத்துப் பிரிவு மாணவர்களுக்குமான விரிவுரைகள் யாவும் 05.06.2000 திங்கட்கிழமையில் இருந்து தொடர்ந்து நடைபெறும். கலைப்பீட மாணவர்கள் அனைவரையும் விரிவுரைகளுக்கு சமுகமளிக்குமாறு கலைப்பீடாதிபதி கேட்டுக்கொள்கின்றார்.

02. 05 - 06 -2000 அன்று ஆரம்பமாக இருந்த இராமநாதன் நுண்கலைக்கழக இறுதியாண்டு மாணவர்களுக்கான செயன்முறைப் பரீட்சைகள் யாவும் மறு அறிவித்தல் வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

பதிவாளர்

(சி/417)

## தகவல் தரவும்

நுணாவில் கிழக்கு சாவகச்சேரியைச் சேர்ந்த K. சரவணபவன் (யாழ். மாநகரசபை நல்லூர்) குடும்பத்தினர் பற்றிய தகவல் அறிந்தோர் அறியத் தரவும்.

செ. செந்தில்மணி
மே/ப திரு. எஸ். தில்லைநாதன்
(இளைப்பாறிய அதிபர்)
புளியடி வைரவர் கோயிலடி.
உடுவில்.

(681)

## பாலன் புத்தக நிலையம்

**87, சிவன் வடக்கு வீதி**
**யாழ்ப்பாணம்**

எமது வியாபார ஸ்தாபனம் மீண்டும் அதே இடத்தில் இயங்குகின்றது என்பதை அறியத் தருகின்றோம்.

இப்படிக்கு
நிர்வாகம்

(686)

## தேடுகின்றோம்

கந்தையா மேனகா (சாவகச்சேரி), நடராசா விஜயலட்சுமி நாவற்குழி, கல்வயல் குகன்மில் உரிமையாளர் ஆகியோரை 'காமதேனு' இனிப்புத் தொழிற்சாலை உரிமையாளர் சிவா தேடுகின்றார்.

தொடர்புகொள்ளவேண்டிய முகவரி,

க நிசாகரன்
மருத்துவ பீடம் முன்பாக
ஆடியபாதம் வீதி, கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

தகவல்
க.சிவகுமார்

(கி/426)

## யாழ் கணனிக் கல்லூரி

பிரதான வீதி, சங்கானை.

### NCCA வகுப்புக்கள் ஆரம்பம்

பிரிவு: I *BASIC LEVEL*

- I Introduction to Computers & Operating Systems
- II Word Processing
- III Spread Sheets
- IV Database Management Systems

பிரிவு: II *INTERMEDIATE LEVEL*

- I Computer Basics & Pascal Programming
- II Window - Based Application Software Packages

மேற்காணும் பாட விதானங்களுக்கான வகுப்புக்கள் 10-06-2K அன்று காலை 9.00மணிக்கு ஆரம்பமாக உள்ளது

குறிப்பு!- எந்த நிறுவனத்தினூடாக பரீட்சைக்கு விண்ணப்பித்தாலும் எமது நிறுவனத்தில் கற்கை நெறியை மேற்கொள்ள முடியும்.

உடன் பதிவை மேற்கொள்ளவும்.

திட்ட முகாமையாளர்

(678)

தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்கு கற்றனைத் தூறும் அறிவு

[- குறள்

# வலம்புரி

## அழியாதசெல்வம்

இனபேதமின்றி யாவர்க்கும் அழியாத செல்வம் கல்வியே. குறிப்பாக தமிழர்க்கும் எவையும் நிலையில்லாதனவாய் காணப்படும் வேளையில் ஒன்று மட்டும் அழியாததாக, அழிக்கமுடியாததாக இருக்கின்றது. அதுவே கல்வி, தேசவேறுபாடின்றி தேசொடு விளங்கக் கூடியதுவும் அதுவே.

காலத்தின் கோலத்தால் பற்பல பின்னடைவுகளை எங்கள் மாணவர்கள் அடைவது கண் கூடு. இவை எல்லாவற்றிற்கும் மத்தியில் பாடைஏறினும் ஏடது கைவிடேல் என்ற அனுபவ மொழி பிறந்த மண்ணிலே காலத்தின் வேகத்தை உணர்ந்து, காலம் பொன்னானது என்பதை புரிந்து கல்விச் சமூகம் மாணவர்க்கு உரியன செய்ய உறுதியும்உற்சாகமும் அடைய வேண்டும்.

இடப் பெயர்வால் தள நிலைகள் தளர்ந்து இட நெருக்கடிகள் கூடி இன்னல் படுவது புரியாமலில்லை பலபாடசாலைகள் அகதிகளால் நிரம்பி வழிகின்றன. அந்த நிலையில் சில மாற்றிடுகளைச் செய்து மாணவர்களை கல்விப்புலத்திற்கு அழைத்துச் செல்ல வேண்டும். அண்ணளவாக 200நாட்களே பாடசாலை தினங்கள் அவற்றை நிறைவு செய்ய நிறைந்த மனத்தோடு நடைமுறைகளை உடைத்தெறிந்துஉழைக்க வேண்டும். புண் உடையவனுக்குத்தான் புண்ணின் வேதனை புரியும் என்பது புரியும். ஆனால் தியாகத் தொண்டு என்ற பதங்கள் அகராதியில் இருக்கும் போதுநாங்கள்ஈடுகொடுக்கத்தானே வேண்டும்.

வடபுலத்து அதிபர்கள் நிரம்பியஅனுபவமும் ஆற்றலும், நிர்வாகத்திறனும் படைத்தவர்கள் ஆசிரியர்களும் அவ்வாறே பணிச் சிறப்புடையவர்கள். மண்ணின் நாளைய மன்னர்களுக்கு உழைக்கப் பின்னிற்க மாட்டார்கள். ஓடக் கூடிய மாட்டை ஓட்டக் கூடிய திறன் ஆசனத்தட்டில் இருப்பவருக்கே உண்டு. அணைந்து அனைக்கத் தெரிந்த அதிபர்களுக்கு ஆசிரியர்களின் ஒத்துழைப்பு அமுதசுரபி போலாகும்.

பொதுப்பரீட்சைகளின் நிகழ்வு நாட்கள் அவலங்களைக் கருத்திற்கொள்வதில்லை. அதிகாரபீடங்கள் ஆணையிடும்போது உண்மை நிலையைப் புரிய வைக்க ஒன்றுபட்டு குரல் எழுப்ப வேண்டும்.

- அன்புடன் ஆசிரியர்


## எரிக் கணேஷ்

02.06.2000 முதல் கொக்குவில்
சந்திக்கு அருகாமையில்
எரிக் கணேஷ் மூக்குக் கண்ணாடி
அகமும் பார்மஸியும்
இயங்குகின்றது அத்துடன் யாழ். நகரில் காலை 9.00மணி தொடக்கம் 1.00மணி வரையும் தொடர்ந்து இயங்கிவருகின்றது. என்பதை வாடிக்கையாளர்கட்கு அறியத் தருகின்றோம்.

(கி-414)



## மீண்டும் யாழ். நகரில்

### சிற்றி ஹாட்வெயர் அன் ஸ்ரோர்ஸ்

55-57 ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம் என்னும் அதே முகவரியில் இயங்கிக்கொண்டிருக்கிறது என்பதை வாடிக்கையாளர்களுக்கு தெரியப்படுத்துகின்றோம்

சகலவிதமான இரும்புப்பொருட்கள், யன்னல், கண்ணாடி வகைகள் போன்ற பொருட்களை நிதான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
தொலைபேசி இல; 2901

வதிவிடம்- 119, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

(634)



## அறிவித்தல்

கொடிகாமத்தைச் சேர்ந்த சர்மிளா (றஞ்சி) ஞானசேகரம் என்பவர் த. செல்வராஜா, ''கஜீலா வாசம்,'' 7ம்கட்டை, சண்டிலிப்பாய் எனும் முகவரியில் இருக்கின்றார் என்பதை பெற்றோரிற்கு அறியத் தருகின்றேன்.

தகவல்
யாழ். அத்தியடியில் வசித்த
த. செல்வராஜா

(647)



## தேடுகின்றோம்

நாவற்குழியைச் சேர்ந்த சச்சிதானந்தம், ஜானகி குடும்பத்தினர் பற்றிய தகவல் அறிந்தவர்கள்தயவுடன் அறியத்தரவும்.

நாகரெத்தினம்அன்கோ
62, ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்

தொ.பே.இல-2406 or 3173 (630)



## தேடுகின்றோம்

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையில் கடமையாற்றும் கல்வயலைச் சொந்த இடமாகவும் நாவற்குழியில் வசித்தவருமாகிய
திரு க. சிவநேசன் என்பவரும் நுணாவில் கிழக்கு, சாவகச்சேரியைச் சேர்ந்த மா. அமிர்தலிங்கம், நா. சொர்ணலிங்கம்
என்பவர்களும் எங்கிருக்கின்றார்கள என்ற தகவல் அறிந்து கொள்ளமுடியவில்லை. இவர்களோ அல்லது இவர்களைப்பற்றித் தெரிந்தவர்களோ தயவு செய்து எமக்கு தகவல் தரவும்

நண்பர்கள்
தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை,
யாழ்ப்பாணம்.

(666) தொ. இல- 2039 அல்லது 3266



## வைத்திய சிகிச்சை

வேலணை வைத்தியர்
சி. இராசரத்தினம் அவர்களின்
வைத்திய நிலையம் மீண்டும் 121, 2ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணத்தில் 01 - 06 - 2000 முதல் சிகிச்சைகளை ஆரம்பித்துள்ளது.. சகல நோயாளர்களும் தொடர்பு கொள்ளவும்.
தொலைபேசி எண்: 2459

வைத்தியர்

(635)



## தவறிவிட்டது.

நாகேந்திரம் சுபாதர்சன் என்பவரது தேசிய அ. அட்டை இல: 783231077V, விசேட அ. அட்டை இல: L0906002181 தொழில் அ. அட்டையும் 31-05-2000 அன்று பரமேஸ்வராச் சந்திக்கும் யாழ். செயலகத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் விலாசத்தில் ஒப்படைக்கவும்.

சண் ஹெட்டா
கே. கே. எஸ் றோட்.
சுன்னாகம்.

யாழ். செயலகம்
(புள்ளி விபரப்பகுதி)
கச்சேரி - யாழ்ப்பாணம்

[661]



## Jaffna College Institute of Technology Vaddukoddai

### Certificate Courses in Business & Scientific Applications

- ★ MS Word
- ★ MS Excel
- ★ MS Access & Power Point
- ★ Visual Basic
- ★ Fox Pro
- ★ Pascal

Courses Commence on 7th June 2000
Please register now.
Fees: Rs. 1000.00 each

Director
Jaffna College Institute of Technology
Vaddukoddai.

(562)



## இடம் மாற்றம்

23/3 ஸ்ரான்லி வீதியில் இயங்கி வந்த
துரை அன் கோ ஸ்தாபனத்தார்
தற்பொழுது தற்காலிகமாக
பேபிவீடுபிளவத்தை, வட்டு வடக்கு, வட்டுக்கோட்டை.
என்றமுகவரியில் இயங்குகின்றது என்பதை வாடிக்கையாளர்கட்கு அறியத்தருகின்றோம்.
வாகனங்களுக்குத் தேவையான சகல பற்றறிகளும் விற்பனைக்கு உண்டு. பற்றறி சார்ச்செய்து கொடுக்கப்படும்.

துரை அன் கோ.

[579]



## பரி-பேதுரு கில்னர்பாலர் பாடசாலை

வண்ணார்பண்ணை

மேற்படி பாலர் பாடசாலை எதிர் வரும் திங்கட்கிழமை (05-06-2000) பாடசாலை மண்டபத்தில் ஆரம்பிக்கப்படும். என்பதை அறியத்தருகிறோம்.

நிர்வாகம்

(676)



## தகவல் தரவும்

நுணாவில் கிழக்கைச் சேர்ந்த நாகராஜா சிவபாலன் குடும்பத்தினரையும் சுவாமிநாதன் குகநாதன் குடும்பத்தினரையும் அருளம்மா நாகராஜா என்பவர் தேடுகின்றார். இவர்கள் பற்றிய தகவல் தெரிந்தவர்கள் தயவுசெய்து கீழ் வரும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

வி. யோகநாதன்
டச்சுறோட்,
சித்தன்கேணி.

இ. பாஸ்கரன்
றியோ கிறீம்கவுஸ்
440 A, பருத்தித்துறைவீதி,
நல்லூர்.
தொலைபேசி 3558

(672)



## தேடுகின்றோம்

இந்திராபுரம், முகமாலையைச் சேர்ந்த இராசலிங்கம் தர்மப்பிரகாசம் என்பவரைத் தேடுகின்றோம்.
தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி

திரு. இராசலிங்கம்
''ஜெகேவாா ராஜ்யமன்றம்''
தம்பசிட்டி வீதி,
பருத்தித்துறை.

(கி-418)



## கலந்துரையாடல்

கலைப் பீட 3 ஆம் வருட மாணவர்களுக்கான அவசர கலந்துரையாடல் 05--06-2000 [திங்கள்]காலை 10.00 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறும். இடம்பெயர்ந்துள்ள மாணவர்கள் உட்பட அனைவரும் தவறாது சமூகம் தரவும்.

3ம் வருடமாணவப்பிரதிநிதி
கலைப்பீடம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

(கி-419)

## யாழ்.ஜெய்ப்பூர் செயற்கைக்கால்திட்டம்

மேற்படி நிறுவனத்தின் அவசர செயற்பாடுகள் தொல்புரம், வலக்கையபரை அம்மன் கோவிலடியில் அமைந்துள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் தற்காலிக களஞ்சியக் கட்டடத்தில் திங்கள், வியாழன், ஆகிய நாட்களில் காலை 9.30 மணி தொடக்கம் 12.30 மணி வரை நடைபெறும் என்பதை அறியத் தருகிறோம்.

நிர்வாகத்தினர்

(கி-424)

# மரண அறிவித்தல்கள்

## பண்டிதர் வினாயகமூர்த்தி நவரத்தினம்

(இளைப்பாறிய ஆசிரியர்)

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட பண்டிதர் வி.நவரத்தினம் காலமாகிவிட்டார்.

அன்னார் வள்ளிநாயகியின் அன்புக்கணவரும் கலாவதி MLSO (UK) கலைச்செல்வன் கணக்காளர் UDA [கொழும்பு] கலாபரன் பொறியியலாளர் (U.K) கலைவாணி F.O (U.K) ஆகியோரின் அன்புத் தந்தையும் சுந்தரலிங்கம் பொறியியலாளர் (U.K) தனலக்சுமி [கொழும்பு] குகசேனி (U.K) லோகேஸ்வரன் கணக்காளர் வார்டன்அன்ட்கோ (U.K)ஆகியோரின் மாமனாரும் சுஜீவா, கோகுலரமணன (U.K) கஜானந்தா, கலைப்பிரியா, நிஜானந்தா [கொழும்பு] அபிராமி,ஆரணி (U.K) துவாரகா, அபிஜன் (U.K) ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.இவர் யூனியன் கல்லூரிதெல்லிப்பழைஇந்துக் கல்லூரி வட்டுக்கோட்டை பெண்கள் கல்லூரி பண்டத்தரிப்பு திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலை ஆகியவற்றின் முன்னாள் ஆசிரியராவர்.

அன்னாரதுஈமக்கிரியைகள்4.6.2000இன்றுஞாயிற்றுக்கிழமை மு.ப 12.00 மணியளவில் கோண்டாவில் கிழக்கு மயானத்தில் நடைபெறும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்

அன்னைஇல்லம்
கோண்டாவில்கிழக்கு
கோண்டாவில்.

ந.வள்ளிநாயகி
[மனைவி]

## திருமதி முருகேசு செல்லம்மா

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் தற்பொழுது கொழும்பில் வசித்தவருமாகிய திருமதி முருகேசு செல்லம்மா 2-6-2000 அன்று கொழும்பில் காலமானார்

இவர் காரைநகரைச் சேர்ந்த காலஞ்சென்ற முருகேசுவின் அன்பு மனைவியுன்கவமலர் (ஜேர்மனி) இராஜேந்திரம் Hatton National Bank, Colombo) ஆகியேரின் அன்புத்தாயரும் அருளானந்தம்(ஜேர்மனி) பவானிதேவி (கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமியாரும், பாலமுகுந்தன்- கௌசியா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிககிரியைகள் இன்று4-6-2000 கொழும்பில் நடைபெறும் இவ்வறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சி சிவப்பிரகாசம்
10/12 சிவன்கோவில்வீதி
திருநெல்வேலி தெற்கு
யாழ்ப்பாணம்

தகவல்.
மு. இராஜேந்திரம்
(மகன்)

(648)

## திருமதி ருக்குமணி வல்லிபுரநாதன்

காங்கேசன்துறையை பிறப்பிடமாகவும் இல 3 கந்தபுராண வீதி கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ருக்குமணி வல்லிபுரநாதன் அவர்கள் 3.6.2000 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரநாதனின் அன்பு மனைவியும், றயூலாதேவி (தாதிய போதனாசிரியர், தாதியர் பயிற்சிப் பாடசாலை யாழ்ப்பாணம்), றேனுகா (ஆசிரியை சென்சாள்ஸ் வித்தியாலயம் யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், மங்கையற்கரசி, செல்வரத்தினம், நடராஜா, வரதராஜா, சசிதரன் (லண்டன்), சிறிதரன் (டென்மார்க்) ஆகியோரின் சகோதரியும், திருஞானசம்பந்தர், கிருஷ்ணதேவி, யோகேஸ்வரி, புவனேஸ்வரி, திலகவதி, சதாரஞ்சினி, சாந்தநாயகி, காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, கந்தசாமி ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவர்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 3.6.2000 சனிக்கிழமை நடைபெற்றன.இவ்வறிவித்தலை உற்றார்உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
வ.றயூலாதேவி வ.றேனுகா
பிள்ளைகள்

(689)

இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரினால் இல 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம். எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000ஆம் ஆண்டு யூன் மாதம் 04 -ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது

**புலிகள்..**

மட்டக்களப்பு.

★ மாவண்ணன்
(சுப்பிரமணியம் பிரசன்னா)
யாழ்ப்பாணம்.

★ விஜயரஞ்சன்
(கிருஷ்ணபிள்ளை வளசுதாகரன்)
மட்டக்களப்பு;

★ இளநிதேவி
(முத்தையா நாகேஸ்வரி)
வவுனியா. (-சி4)

**அதிகாரப்...**

னைத் தெரிவித்துள்ளார்:

விடுதலைப் புலிகளுடனான பேச்சில் தனக்கு நம்பிக்கையில்லை என்றும் நோர்வே அரசு பேச்சுக்கான ஆரம்ப நடவடிக்கையிலேயேஈடுபட்டு வருகிறது என்றும் ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார். (வ-ச)

**ஈழம்...**

மதிக்கப்படமாட்டார்கள்.

தவறாகப் பரப்பப்படும் வதந்திகளைத் தடுக்கவும், பொய்யான தகவல்களைத் தவிர்க்குமுகமாகவுமே பத்திரிகை செய்தித் தணிக்கை அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது.

தொடரும் விடுதலைப்புலிகளுடனான யுத்தத்தில் ஈடுபடுத்துவதற்கு போதியளவு படையினர் இல்லாத பற்றாக்குறை நிலவுகிறது. எனவே ஒவ்வொரு தேர்தல் தொகுதியிலும் இருந்து110 பேரை இராணுவத்தில் இணைப்பதற்கு பாராளுமன்ற உறுப்பினர்கள்நடவடிக்கை எடுத்து செயலில் இறங்க வேண்டும்.

இதே வேளை யாழ்ப்பாணதில் உள்ள இராணுவத்தினரின் நிலையைப்பலப்படுத்துவதற்குத் தற்போது நாலாயிரம் இராணுவத்தினர் யாழ்ப்பாண யுத்த முனைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர் என்று மேலும் அவர் தெரிவித்தார்; (வ-ச)

**திருடர்...**

தாக தெரிவிக்கப்படுகிறது.

குருநகர் களஞ்சியத்தில் இருந்து பால்மாவகைகள், சீனி போன்ற பொருட்களை லான்ட்மஸ்டரில் எடுத்துச் செல்லப்பட்ட போது செயலக அதிகாரிகள் மடக்கிப் பிடித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. [வ-12

**கலந்துரையாடல்..**

மணிக்கு கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் உதவிஆணையாளர்செ கு.சண்முகநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இடம் பெயந்தவர்கள் பொதுமுகாமையாளர்கள் தங்கள் பணியாளர்கள் விவரத்துடன் கலந்து கொள்ளுமறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். [வ]

**யாழ்குடாவில்-**

கங்கள் அத்தியாவசிய உணவுப் பொருட்களைஏற்றி இறக்குவதற்கு தமது லொறிகளுக்கு போதியளவு டீசலைக் கையிருப்பில் வைத்துக் கொள்ள வேண்டும் என யாழ். அரச அதிபர் கேட்டுள்ளார்.

**ஈழத்...**

இலங்கையின் இனப் படுகொலைக்கு ஆளாகும் இலங்கை தமிழர்களுக்கு ஆதரவு தெரிவித்தும் இலங்கை விவகாரத்தில் தற்போதைய புதுடில்லி அரசு கைக்கொள்ளும் அணுகு முறைக்கு ஆதரவு தெரிவித்தும் இவ் ஆர்ப்பாட்ட பேரணி நடத்தவிருந்தது குறிப்பிடத்தக்கது. (வ-க)

**இலங்கை..**

அவர் மேலும் தெரிவிக்கையில்! இலங்கைப் பிரச்சினையில் அமைதி காண்பதையே இந்தியா விரும்புகிறது என்றும் இலங்கை அரசு இலங்கை தமிழர் விடயத்தில் தனது போக்கை மாற்றிக்கொண்டு அமைதி வழியை கடைப்பிடிக்க வேண்டும் என்றார். (வ-க)

## ஓய்வூதிய வவுச்சர் அனுப்பிவைப்பு

(யாழ்ப்பாணம்)

பர்மா, மலேஷியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளின் மேமாதத்திற்கான ஒய்வூதிய வவுச்சர்கள் இம்மாதம் 1ஆம் திகதி சம்பந்தப்பட்ட வங்கிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டிருப்பதாக யாழ். செயலக ஓய்வூதியக் கிளையினர் அறிவித்துள்ளனர். (வ)

## ஐடியல் அககடமி

(நாதன் மற்ஸ் அக்கடமி)

சண்டிலிப்பாய்

**OL/DAY CLASS பிரிவு II**

**ஆரம்பம்:- 2000-06-05 திங்கள் 8.30 மணி**

| | |
|---|---|
| கணிதம்:- | திரு. V.N.பத்மநாதன் |
| | திரு. B. குகதாசன் |
| விஞ்ஞானம்:- | திரு. தேவா |
| தமிழ்:- | திரு. V.M. லிங்கம் |
| ச. கல்வி:- | திரு. T. அரங்கநாதன் |
| ஆங்கிலம்:- | திரு. S. சூரி |
| சமயம்:- | திரு. T. O. பவன் |
| விவசாயம்:- | திரு. V. பரம் |
| வர்த்தகம்:- | திரு. N. சிவதாசன் |

குறிப்பு:- நாதன் ஆசிரியரின் கணித வகுப்புகள் சனி, ஞாயிறு நாட்களில் நடைபெறும்

(674)

## விக்னா கல்வி நிறுவனம்

52 ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

நாளை ஆரம்பம்

கலை வர்த்தகம் 2000, 2001, 2002 சனி-ஞாயிறு

**2000 DAY CLASSES**

O/L DAY CLASS EVENING, 6 தொடக்கம் 10 வரையான வகுப்புக்கள் அனைத்தும் வழமையான நேர அட்டவணைப் படி 05-06-2000 (திங்கள்) ஆரம்பமாகின்றது

நிர்வாகி

(687)

## கண்ணீர் அஞ்சலி

யாழ். தாதியர் பயிற்சிப்பாடசாலை
போதனாசிரியர்

செல்வி றயூலாதேவி வல்லிபுரநாதன்
அவர்களின் அன்புத்தாயார்

### திருமதி ருக்குமணிவல்லிபுரநாதன்

அவர்களின் மறைவுக்கு எமது கண்ணீர்அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்வதுடன் துயருறும் அவரின் குடும்பத்தினருக்குஎமதுஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

A..94 பிரிவு மாணவர்கள்
யாழ்.போதனா வைத்திய சாலை

(691)

## கண்ணீர் அஞ்சலி

இராசா கணேசலிங்கம்
(கிராம அலுவலர் ஆவரங்கால் மேற்கு)
அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி இராசா பறுபதம்

01.06.2000ம்அன்று காலமானார் இவரின் மறைவையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்

நலன்புரிச் சங்கம்
பிரதேச செயலகம்
கோப்பாய்

(685)

## கண்ணீர் அஞ்சலி

யாழ். தாதியர் பயிற்சிப் பாடசாலை போதனாசிரியர்
செல்வி

றயூலாதேவி வல்லிபுரநாதன்
அவர்களின் அன்புத் தாயார்.

### திருமதி ருக்குமணிவல்லிபுரநாதன்

அவர்களின் மறைவு குறித்து வருந்துகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தவர்களுக்கு எமது அனுதாபங்களைத் தெரிவித்து அன்னாரின் ஆன்மாசாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

அதிபர், போதனாசிரியர்கள்,
தாதிய மாணவர்கள்.

தாதியர் பயிற்சிப் பாடசாலை.
யாழ்ப்பாணம்.

(690)